பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண். 66/2022

பி.வா.சா.–3 – பாலமுருகன் , த/பெ. சோலையன்

நாள். 20.04.2026

பி.வா.சா.3. இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் கிரையம் வாங்கிய வழக்கிடை 3,4 அயிட்ட சொத்துக்கள் 24,25,26 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லியுள்ள 12.08.1963 ல் கைலாசம் என்பவரிடமிருந்து அழகர் என்பவர் கிரையம் பெற்று அவருக்கு பின் அவரது வாரிசுகளான 24 முதல் 26 பிரதிவாதிகளிடமிருந்து நான் 3,4 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை என் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 24 முதல் 26 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4. தான். அந்த ஆவணத்தில் பூர்வீக பாத்தியப்பட்டது என்று ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4. ஆவணத்தில் 1963 கிரையப்படி சொத்துக்கள் பெறப்பட்டு அதன் மூலம் தற்போது கிரையம் செய்யப்படுகிறது என்ற வாசகம் உள்ளதா என்றால் இல்லை. 1963 கிரையப்படி கைலாசம் சேர்வை தனக்காகவும் தனது மைனர் குழந்தைகள் மூவருக்காகவும் விற்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அவர்கள் வழக்கில் உள்ள பிரதிவாதிகளா என்றால் இல்லை. அழகர் சேர்வை எந்த வருடம் இறந்தார் என்பது தெரியுமா என்றால் 2002 க்குள் இருக்கும், சரியாக தேதி நினைவில்லை. அழகப்பன் சேர்வை மகன் கைலாசம் சேர்வைக்கு 3,4 வழக்கிடை சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அது 60 வருடங்களுக்கு முன்னால் நடந்தது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5. ஆவணப்படி கைலாசம் சேர்வைக்கு பாத்தியப்பட்ட முழுப்பங்கையும் கொடுத்து விட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரிதான். கைலாசம் சேர்வை, அழகர் சேர்வைக்கும் சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதற்கு ஏதாவது பத்திரம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கைலாசம் சேர்வை, அழகர் சேர்வை ஆகியோர்கள் எந்த பத்திரத்தின் வாயிலாக சொத்தை பிரித்துக் கொண்டார்கள் என்றால் பி.வா.சா.ஆ.5. ஐ தவிர வேறு எந்த ஆவணமும் நான் பார்க்கவில்லை. 1953 ல் ஒரு பத்திரம் குறித்த சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும் போது மேற்படி பத்திரத்தை பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி விஜயசாந்தியை எனக்கு தெரியும், அவர் எனது உள்ளூர்காரர் ஆவார். அவர் வாங்கிய தாவா 1,2 சொத்தை பற்றி தெரியுமா

என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்துக்களின் விவரம் ெற்றி எனக்கு தெரியாததால் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் கண்ட சொத்துக்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி விஜயசாந்தி வழக்கில் கண்ட சொத்துக்களை வாங்கவில்லை. வாதியையும், மற்ற பிரதிவாதிகளையும் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் போலியான பத்திரம் தயார் செய்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பத்திரத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பத்திரங்கள் தாவா வழக்கிற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்றாலும் நானாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.21 21:42:00 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.